# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

## Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| **CC** | 384 | 2016 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| **LW** | **PW**1 | சண்முகவேல் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | | |
| முகவரி: | | | |
| **Religion / Caste :** | | ***HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST*** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of** 1873 **of the day of**

**Examination Date** / சாட்சி விசாரணை தேதி :- 19/01/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ராயகவுண்டன்புதூர் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். புகார்தாரர் செல்வகுமாரை எனக்கு தெரியும். 1 முதல் 4 வரையிலான எதிரிகளை எனக்கு தெரியும்.2 ம் எதிரி கந்தசாமி இறந்துவிட்டார். எதிரி தங்கராஜ்தோட்டத்திற்கு ஒருதோட்டம் தள்ளி எனது தோட்டம்உள்ளது. கடந்த 11.09.2016 ம்தேதி தங்கராஜ் தோட்டத்திற்கு அருகே நான் ஆடு மேய்த்து கொண்டிருந்த போது செல்வகுமார் தோட்டத்திற்கு பக்கம் சத்தம்கேட்டது போய் பார்த்தேன் செல்வகுமார் தலையில் காயத்துடன் நின்றுகொண்டிருந்தார் அப்போது செல்வகுமார் அப்பா குப்புச்சாமியும் அங்கு வந்துவிட்டார். என்னிடம் செல்வகுமாரும் அவரது அப்பாவும் செல்வகுமாருக்கு ஏற்பட்ட தலைக்காயமானது தங்கராஜ், கந்தசாமி மற்றும் பொம்பளைங்க இரண்டு பேர் கல்லைக்கொண்டு அடித்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னைவிசாரணை செய்துக்கொண்டார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

முதல்விசாரணையில் சொன்ன சங்கதியை தான் போலீசார்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரர் செல்வகுமார், சாட்சி குப்புச்சாமி ஆகியோர் எனக்கு பங்காளி உறவு என்றால் சரிதான். எதிரிகள் புகார்தாரர் செல்வகுமாரை அடித்ததை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோன்று எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றும், செல்வகுமார், சாட்சி குப்புச்சாமி ஆகியோர் எனது பங்காளி ஆவார்கள் என்றும் அதன் அடிப்படையில் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(**sd**) **Sanmugavel**
**Signature of the witness**
(சாட்சியின் கையெழுத்து)

**Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.**

(**sd**) **R.Pandy**

**Judicial Magistrate**
**Oddanchatram.**
**Date** : 19/01/2021

## DEPOSITION OF WITNESS

(**Chapter XXIII Code of Criminal Procedure**)

## Judicial Magistrate Court At Oddanchatram

| **Case Type** | **No** | **Year** | |
|---|---|---|---|
| **CC** | 384 | 2016 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| **LW** | **PW**2 | விஜயகுமார் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | | |
| முகவரி: | | | |
| **Religion** / **Caste** : | ***HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST*** | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of** 1873 **of the day of**

**Examination Date** / சாட்சி விசாரணை தேதி :- 19/01/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ராயகவுண்டன்புதுார் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். நானும், சாட்சி பழனிச்சாமியும் குள்ளவீரன்பட்டிக்கு சென்றுக்கொண்டிருந்தோம் அப்போது போகும் வழியில் அம்பிளிக்கை போலீசார் மண்பாதை அருகே நின்று எழுதி விசாரித்துக்கொண்டிருந்தார்கள் அதில் சாட்சி கையெழுத்து எங்களிடம் கேட்க செய்து கொடுத்தோம்.பார்வைமகஜர் அ.த.சா.ஆ.1. போலீசார் என்னைவிசாரணை செய்துக்கொண்டார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

நான் கையெழுத்து செய்த பேப்பரில் போலீசார் என்ன எழுதிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் செல்வகுமார், சாட்சி குப்புச்சாமி எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து பார்வைமகஜரில் உள்ள கையெழுத்தை நான் செய்துவிட்டு புகார்தாரர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(**sd**) **Vijayakumar**
**Signature of the witness**
(சாட்சியின் கையெழுத்து)

**Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct**.

(**sd**) **R**.**Pandy**

**Judicial Magistrate**
**Oddanchatram**.
**Date** : 19/01/2021